18 OCT 2010

## சுருக்கம்

நிலம் – வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக பணியாளர்களுக்கு போதிய இடவசதி இல்லாதது – தஞ்சாவூர் நகராட்சிக்குச் சொந்தமான பள்ளியக்ரஹாரம் கிராமம் வார்டு எண்.III, பிளாக் எண்.1, நகரளவு எண்.31–ல் உள்ள 11283 சதுர அடி விஸ்தீரணம் இடத்தினை புதிதாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் கட்ட இலவசமாக வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண்.245 நாள்: 15.10.2010.

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க. எண். 17026/ மாந அ3, நாள். 6.9.2010.

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகம் கடந்த 1976–ம் ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டு, இன்றுவரை வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், மேற்படி அலுவலகம் தொடங்கியபோது அலுவலர்கள் உள்ளிட்ட 7 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வந்ததாகவும், தற்போது உள்ள நிலையில் அலுவலர்கள் உள்ளிட்ட 38 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், தற்பொழுது மாத வாடகை ரூ.10,000/– செலுத்தப்பட்டு இயங்கி வரும் கட்டிடத்தில் போதிய வசதிகள் மற்றும் இடவிஸ்தரிப்பு செய்ய இயலாத நிலையினைக் கருத்தில்கொண்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தமாக அலுவலகக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு, தஞ்சாவூர் நகராட்சிக்கு சொந்தமான பள்ளியக்ரஹாரம் கிராமம் வார்டு எண்.III, பிளாக் எண்.1, நகரளவு எண்.31–ல் உள்ள 18,247 சதுர அடி விஸ்தீரணம் உள்ள இடம் (128–1/2 X 142=18,247) தெரிவு செய்யப்பட்டு அரசு நிதி உதவியுடன் அவ்விடத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிதாக தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகம் கட்டுவதற்கு தேவையான நிலத்தினை இலவசமாக ஒதுக்கீடு செய்து வழங்க தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, சேலம், மதுரை, திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளுக்கு சொந்தமான இடங்களை, தானமாக வழங்கி, அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.2.1997–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து, அரசாணை (நிலை) எண்.208, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2.11.2009–ல்

உத்தரவிட்டுள்ளதுபோல், தஞ்சாவூர் நகரம் கோட்ட பள்ளியக்ரஹாரம் கிராமம் வார்டு எண்.3, பிளாக் எண்.1, நகரளவு எண்.31-ல் உள்ள 11283 சதுர அடி நிலப்பகுதியினை தானமாக வழங்க தஞ்சாவூர் நகர்மன்றத் தீர்மான எண்.902, நாள் 28.5.2010-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் நிலமாற்றம் மேற்கொள்ள தஞ்சாவூர் நகராட்சி ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் மேற்படி செயற்குறிப்பினை அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர் தஞ்சாவூர் நககாட்சிக்குச் சொந்தமான தஞ்சாவூர் நகரம் கோட்ட பள்ளியக்ரஹாரம் கிராமம் வார்டு எண்.3, பிளாக் எண்.1, நகரளவு எண்.31-ல் உள்ள 11283 (10038 +1245) சதுர அடி நிலப்பகுதியினை, அரசாணை (நிலை) எண். 35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 17.2.2007-இல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தை அரசு மற்றும் அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கும்போது, அதனை, அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையிலேயே வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளதிலிருந்து விலக்களித்து, தஞ்சாவூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்ட தானமாக அளித்து நிலமாற்றம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5.
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
தஞ்சாவூர் நகராட்சியின் மண்டல நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர்,
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.
நகராட்சி ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி, தஞ்சாவூர்.

நகல்:

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை- 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 15/2/10